




தி.மு.கழகத்தின் இதயமாம் இளைஞரணியின் 2ஆவது மாநில மாநாடு சேலத்தில் வரும் டிசம்பர் 17ஆம் தேதி எழுச்சியோடு நடைபெறவுள்ளது. கழக வரலாற்றில் புதிய மைல்கல்லாக அமையப்போகிற இம்மாநாட்டிற்கு, இளைஞரணி நிர்வாகிகளை தயார்படுத்துகிற விதமாக தேனி தெற்கு – வடக்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இக்கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எல்.மூக்கையா, தேர்தல் பணி செயலாளர் கம்பம் பெ.செல்வேந்திரன், மாவட்டச் செயலாளர்கள் கம்பம் என்.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச்செல்வன், முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் ஜெயக்குமார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.மகாராஜன், கே.எஸ். சரவணக்குமார் மற்றும் பலர் உள்ளனர்.





தமிழ்நாடு முழுவதும் மாவட்டங்கள் தோறும் கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு, பொற்கிழி வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, தேனி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டக் கழகத்தை சேர்ந்த 1000 மூத்த முன்னோடிகளுக்கு தலா ரூ.10,000 பொற்கிழியை கம்பத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இதில் அமைச்சர் ஐ.பெரியசாமி, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எல்.மூக்கையா, தேர்தல் பணி செயலாளர் கம்பம் பெ.செல்வேந்திரன், மாவட்டச் செயலாளர்கள் கம்பம் என்.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச்செல்வன், முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் ஜெயக்குமார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.மகாராஜன், கே.எஸ். சரவணக்குமார் மற்றும் பலர் உள்ளனர்.





முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, தொகுதி தோறும் கலைஞர் நூலகம் அமைக்கப்பட்டு வருகிறது. இதனையொட்டி தேனி தெற்கு மாவட்டம் கம்பம் நகரத்தில் கழக இளைஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தை நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். உடன் மாவட்டச் செயலாளர்கள் கம்பம் என்.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச் செல்வன்ஆகியோர் உள்ளனர்.





கழக இணைஞர் அணி சார்பில் 234 தொகுதிகளிலும் கலைஞர் நூலகத்தை அமைக்க வேண்டும் என்ற கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக்கான கலைஞர் நூலகத்தை கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேனி நகரில் நேற்று திறந்து வைத்தார். உடன் மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச் செல்வன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.